Available online at: http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
IJMASRI, Vol. 1, issue 1, pp. 188- 193, Oct. -2023
https://doi.org/10.53633/ijmasri

INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)

ISSN: 2582-9130 IBI IMPACT FACTOR 1.5 DOI: 10.53633/IJMASRI

RESEARCH ARTICLE

# ஐம்பெரும் காப்பியங்கள் காட்டும் தமிழ் மன்னர்களின் வரலாறு

இரா. முருகன்
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், வரலாற்றுத்துறை, அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்
மின்னஞ்சல்: murugankishoor880@gmail.com.

*ஆய்வுச் சுருக்கம்*

*முற்காலத்தில் தமிழில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி என்னும் காப்பியங்கள் ஒருங்கே ஐம்பெருங் காப்பியங்கள் என அறியப்படுகின்றன. இவற்றுள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்கம் மருவிய காலத்திலேயே தோன்றியவை. ஏனையவை சோழர் காலத்தில் தோன்றியவையாகும். தமிழில் தோன்றியுள்ள காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பெரியபுராணம் மட்டுமே தமிழ்நாட்டுக் கதைகளை மூலக் கருவாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன. மற்றவைகள் சமசுகிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளின் தழுவல்களாகவோ அல்லது தமிழாக்கங்களாகவோ உள்ளன.*

**குறிச்சொற்கள்:** *சேரர், சோழர், பாண்டியர், சிலப்பதிகாரம், மணிமேகலை*

## முன்னுரை

*தமிழர் வரலாறு மிக நீண்டதொரு வரலாற்று தொன்மையை கொண்டது தமிழர்களின் வரலாற்றுக்கு மிக நீண்ட நெடியதாக இருந்தாலும் அவை அனைத்தும் வரலாறாக அங்கீகரிக்கப்படுவதில்லை மேலும் நம்பத் தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் வரலாற்றை கட்டமைக்கும் போது இலக்கிய குறிப்புகள்,புராண குறிப்புகள், நாட்டுப்புறப் பாடல்கள் போன்றவை அதற்கு துணை சேர்க்கும் வகையில் அமைந்திருக்க கூடியது. அந்த வகையில் தமிழர் வரலாற்றில் பலம் பெறும் பெருமையை நிரூபிக்க ஐம்பெரும் காப்பியங்கள் துணை நிற்கின்றன. காப்பியம் என்பது இலக்கிய வடிவங்களில் ஒன்றாகும். சிலப்பதிகாரம் மணிமேகலை குண்டலகேசி வளையாபதி சீவக சிந்தாமணி என்னும் காப்பியங்கள் ஒருங்கே ஐம்பெருங் காப்பியங்கள் என அறியப்படுகின்றன. இவற்றுள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்க மருவிய காலத்தில் தோன்றிய காப்பியங்களாக ஏனையவை சோழர் காலத்தில் தோன்றியவையாகும்.*

## ஐம்பெரும் காப்பியங்களும் அதன் ஆசிரியர்களும்

*ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரம் ஆனது சேர நாட்டவரான இளங்கோவடிகளினால் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. மணிமேகலை நூலின் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் ஆவார். குண்டலகேசி என்னும் நூலானது திருத்தக்கதேவரினால் எழுதப்பட்டதாகும். ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான வளையாபதி*

நூலை எழுதிய ஆசிரியர் பெயர் இன்று வரை அறியப்படவில்லை.

**சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள்.**

நற்றிணைப் பாடல் கண்ணகி வரலாற்றைக் குறிப்பிடுகிறது. மலையாள மொழி கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தோன்றியது. மணிமேகலை வஞ்சி மூதூர் சென்று பல்வேறு சமயங்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தது மலையாளத்தில் அன்று. தமிழில். எனவே மணிமேகலை காலம் ஆறாம் நூற்றாண்டுக்கு முந்தையது. புகார் நகரத்தில் சிவன்கோயில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. 276 ஊர்களிலிருந்த சிவன்கோயில்களைக் குறிப்பிடும் தேவாரம் இதனைக் குறிப்பிடவில்லை எனவே புகார் நகரைக் கடல் கொண்டது தேவாரம் தோன்றிய 7 ஆம் நூற்றாண்டுக்கு முந்தியது. புகார் நகரத்தில் பலராமனுக்கும், கண்ணனுக்கும் தனித்தனிக் கோயில்கள் இருந்ததைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. 108 திருப்பதிகளைக் காட்டும் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் நூலில் இந்தக் கோயில் பற்றிய செய்தியே இல்லை இதனாலும் சிலப்பதிகாரம் 7 ஆம் நூற்றாண்டுக்கு முந்தியது என்பது உறுதியாகிறது. கண்ணகி விழாவுக்குச் சென்றிருந்த இலங்கை மன்னன் கயவாகு தன் நாட்டு இலங்கையில் எழுப்பப்போகும் கோயிலிலும் எழுந்தருளும்படி, கண்ணகி தெய்வத்தை வேண்டிக்கொள்கிறான்.

இந்தக் கயவாகு காலம் கி.பி. 171-193 தேவாரம், திவ்வியப் பிரபந்தம், கம்பராமாயணம், சீவகசிந்தாமணி முதலான நூல்கள் விருத்தப்பா என்னும் பா வகையைத் தோற்றுவிப்பதற்கு முன்னர் வழக்கில் இருந்த ஆசிரியப்பா நடையில் அமைந்துள்ள சிலப்பதிகாரமும், மணிமேகலையும் அந்த நூல்களுக்கு முந்தியவை. எனவே இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. சமண மதச் சார்புடைய நூல் வளையாபதி. பௌத்த மதச் சார்புடைய நூல் குண்டலகேசி. இவ்விரு நூல்களும் தற்போது முழுமையாகக் கிடைக்கவில்லை. மேற்கோள்களாகக் காட்டப் பெற்றுள்ள ஒரு சில செய்யுள்களே கிடைத்துள்ளன. ஐஞ்சிறு காப்பியங்களுள் சூளாமணியைத் தோலாமொழித் தேவர் இயற்றினார். இது கவிதை நயத்தில் சிந்தாமணியைப் போன்றதொரு நூலாகும். நீலகேசி என்ற நூலை எழுதியவர் பெயர் தெரியவில்லை. இஃதொரு சமண மத நூலாகும். உதயணன் வரலாற்றைக் கூறும் நூலே உதயண குமார காவியமாகும். 'உயிர்க் கொலை தீது' என்பதை வலியுறுத்த எழுந்த நூலே யசோதர காவியம் நாககுமார காவியம் என்றொரு நூல் பெயரளவில் குறிக்கப்படுகிறதே தவிர, இதனைப் பற்றி வேறொரு குறிப்பும் தெரியவில்லை.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவன்போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை என்று பாரதியாரால் புகழப்பெற்ற முப்பெரும் புலவருள் ஒருவர் இளங்கோ. இளங்கோ சேரவேந்தன் சேரலாதனின் இளைய மகன்; மூத்தவன் சேரன் செங்குட்டுவன். இவர் இளவரசன் ஆதலால் இளங்கோ என அழைக்கப்பட்டார்; துறவு பூண்டதால் அடிகள் என்ற சிறப்புப் பெயருடன் இளங்கோ அடிகள் எனச் சிறப்பிக்கப் பெற்றார். இவர் துறவு பூண்டதற்கான காரணம் என்ன? அடிகளே வரந்தரு காதையில் குறிப்பிடுகிறார்; சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எழுப்பி விழா நடத்தியபோது, தெய்வமாகிய கண்ணகி தேவந்திமேல் வந்து தோன்றி அங்கு வந்திருந்த இளங்கோவடிகளை நோக்கி அவரது உயர் பண்பைப் பாராட்டிப் பேசுகிறாள். 'இளவரசே! வஞ்சிமாநகரின் மணி மண்டபத்தில் நின் தந்தை சேரலாதன், தமையன் செங்குட்டுவனுடன் அமர்ந்திருந்தாய்; அப்போது அரசனைக் காண வந்த நிமித்திகன் ஒருவன், அரசனாக வீற்றிருக்கும் அழகிய வடிவ இலக்கணம் உனக்கே உண்டு என்று கூறினன்; அப்போது நீ நிமித்திகனைக் கோபத்துடன் பார்த்துச் செங்குட்டுவன் மனத்துயர் நீங்குமாறு உடனே துறவு பூண்டனை; இதனால் உனக்கு நாட்டை ஆளும் பொறுப்பு நீங்கியது; அதே நேரத்தில் மனத்தாலும் எண்ண முடியாத, எல்லை இல்லாத பேரின்பத்தை அளிக்கும் வீட்டுலகை ஆளும் அரசனாக ஆனாய்', இவ்வாறு கண்ணகித் தெய்வம் இளங்கோவுக்கு அருள் செய்கிறாள். இச்செய்தி சிலப்பதிகாரப் பதிகத்திலும் இடம்பெறுகிறது.

இளங்கோவடிகள் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்றாலும், அவர் எல்லாச் சமயத்தையும் சமமாக மதித்தவர். எந்தவிடத்தும் அவர் சமயக் காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தவில்லை. பிற சமயத்தை, சமயத்தினரைப் பழித்ததில்லை. மாறாகப் பிற சமயத்தை - சமயக் கணக்கரைப் போற்றியுள்ளார். சிலப்பதிகாரம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த காப்பியம் என்பது பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து. இதற்கான அடிப்படைச் சான்றுகளில் ஒன்று இளங்கோ சேரன் செங்குட்டுவனின் தம்பி என்பது. இச்செங்குட்டுவன் சங்க இலக்கியத்தில் ஒன்றான பதிற்றுப்பத்தில் பாடப் பட்டவன்; இவன் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. அடுத்த சான்று, வரந்தரு

காதையில் இடம் பெறும் கண்ணகி வழிபாட்டில் இலங்கை வேந்தன் கயவாகு கலந்து கொண்டான் என்பது. இவன் காலமும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பது இலங்கை வரலாற்றால் அறியப்படுகிறது. மூன்றாவதாகச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு காப்பியங்களிலும் இடம்பெறும் பதிகங்களில் ''இளங்கோ சிலம்பு பாடச் சாத்தனார் கேட்டார்'' எனவும், ''சாத்தனார் மணிமேகலை பாட இளங்கோ கேட்டார்'' எனவும் கூறப்பட்டுள்ளன. இங்குக் குறிக்கப் பெறும் சாத்தனார் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பது அறிஞர் கண்ட முடிவு. இவற்றால் சிலப்பதிகாரம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த காப்பியம் என்பது உறுதி செய்யப்படுகிறது.

**மணிமேகலைக் காப்பியம்**

மணிமேகலையை இயற்றியவர் மதுரைக் கூல வாணிகர் சீத்தலைச் சாத்தனார். மணிமேகலைக் காப்பியத்திற்கு "மணிமேகலைத் துறவு" என்றும் பெயர் உண்டு. இதனை இயற்றிய சாத்தனார், சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகள் முன்னிலையில் இதனை அரங்கேற்றினார். சாத்தனார், இளங்கோ அடிகள், இவரின் சகோதரர் செங் குட்டுவன் ஆகிய மூவரும் ஒரே காலத்தவர்கள். தமிழில் தோன்றிய முதல் சமயக் காப்பியம் மணிமேகலை. மேலும், தலைமை மாந்தரின் பெயரைக் கொண்ட முதல் காப்பியம் மணிமேகலை. மணி மேகலைக்கு இணையான அல்லது துணையான தலைமை மாந்தர் இதில் இடம் பெறவில்லை. சேரன் செங்குட்டுவனும், மணிமேகலையின் ஆசிரியர் சாத்தனாரும் நண்பர்கள். கண்ணகியின் வரலாற்றைச் சாத்தனார் சொல்லக் கேட்டுக் கண்ணகிக்குக் கோயில் அமைத்தார் சேரன் செங் குட்டுவன். இந்த விழாவுக்கு இலங்கை வேந்தன் கயவாகு என்பவரைச் சேரன் செங்குட்டுவன் அழைத்தார். இவர் கி.பி.171 முதல் 193 வரையிலும் இலங்கையை அரசாண்டார். கயவாகுவின் நண் பனான சேரன் செங்குட்டுவனும், இளங்கோவடி களும், சாத்தனாரும் ஒரே காலத்தவர் என்பது இதன் மூலம் தெரியவருகிறது. எனவே, மணிமேகலைக் காப்பியத்தைச் சாத்தனார் கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றியிருக்க வேண்டும். வட இந்தியாவை குஷான் வம்சத்து அரசர் கனிஷ்கர், கி.பி.120-162 வரை ஆட்சி புரிந்து, பௌத்த சமயத்தைப் பரப்பினார். அவர் காலத்தில் மகா யான பௌத்தத்தை உருவாக்கிய நாகார்ஜுனர், கி.பி. 200-இல் வாழ்ந்தவர் என்று வரலாற்றுப் பேராசிரியர் கீத் *(Prof.Keeth)* கூறுகிறார். மணி மேகலையில் "சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதையில்", தமிழ்நாட்டிலிருந்த பல்வகைச் சமயங் களைப்பற்றிக் கூறுகின்ற சாத்தனார், ஹீனயானத் திற்கு மாறுபட்ட கொள்கையை உடைய மகாயான பௌத்தத்தைப் பற்றிக் கூறாதிருப்பது, நாகார்ஜுனரது கொள்கைகள் பரவுவதற்கு முன்பே, அதாவது கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் மணி மேகலை இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று புலப்படுத்துகிறது. கி.பி.200க்குப் பிறகு தமிழ்நாட்டைக் களப்பிரர் ஏறத்தாழ கி.பி.575 வரையில் அரசாண்டார்கள். எனவே, கி.பி.200க்குப் பின்னர் மணிமேகலையும் சிலப்பதிகாரமும் எழுதப்பட்டிருக்க முடியாது. கி.பி.200-க்குள்ளேயே எழுதப்பட்டிருக்க வேண்டும். அதாவது, கடைச் சங்க காலத்திலேயே இயற்றப் பட்டவை என்று பல ஆராய்ச்சியாளர்கள் கூறி யுள்ளார்கள். சங்கச் செய்யுள்களில் பல்லவர்களைப் பற்றிக் கூறப்படவில்லை. அதிலும் சிறப்பாகத் தமிழ் நாட்டு வேந்தர்களை ஆங்காங்குக் குறிப்பிட்டுச் சொல்கின்ற சிலப்பதிகாரமும், மணிமேகலையும் பல்லவ அரசர்களைக் கூறவில்லை. காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தமிழ்நாட்டின் வடபகுதியை அரசாண்ட மன்னர்களான பல்லவர்களைப்பற்றிக் கூறப்படாததால், பல்லவர் தமிழ்நாட்டிற்கு வரு வதற்கு முன்னர் "மணிமேகலை" இயற்றப்பட்டிருக்க வேண்டும். காஞ்சிபுரத்தை அரசாண்டவன் சோழ மன்னன் என்றும், அவன் "நலங்கிள்ளி" என்பவன் தம்பி "இளங்கிள்ளி" என்பவன் என்றும் மணிமேகலை கூறுகின்றது. பல்லவர் முதன்முதலில் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றியது கி.பி.நான்காம் நூற்றாண்டிலென்றும், கி.பி.மூன்றாம் நூற்றாண்டு வரையிலும் சோழர்கள் சோழ நாட்டிலும், தொண்டை நாட்டிலும் வலிமை பெற்றிருந்தார்களென்றும், "குமாரவிஷ்ணு" அல்லது "ஸ்கந்தவர்மன்" என்னும் பெயருள்ள பல்லவ அரசன் தமிழ்நாட்டின் வடக்கிலிருந்து வந்து முதன் முதலில் காஞ்சிபுரத்தைச் சோழரிடமிருந்து கைப் பற்றியது ஏறத்தாழ கி.பி.325 ஆம் ஆண்டென்றும் ஹீராஸ் பாதிரியார் கூறியுள்ளார். எனவே, மணி மேகலையில் கூறப்பட்டுள்ளபடி காஞ்சியை அர சாண்ட மன்னன் சோழர் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆவார். ஆகவே, மணிமேகலை கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதை விளக்க வேறு சான்றுகள் ஏதும் தேவை இல்லை

**வளையாபதி**

வளையா பதியின் ஆசிரியர் பெயர், இயற்றப் பட்ட காலம், அக்காவியத் தலைவன் பெயர், காவியத்தின் கதை போன்றவை தெரியவில்லை. இக்காவியத்தின் 72 பாடல்கள் தான் கிடைத்துள்ளன. அவற்றில் 66 பாடல்கள் 14-ஆம் நூற்றாண்டில் தோன்றிய

புறத்திரட்டிலும், 3 பாடல்கள் சிலம்பின் அடியார்க்கு நல்லார் உரையில் மேற்கோளாகவும், 2 பாடல்கள் யாப்பருங்கலக்காரிகை என்னும் இலக்கண நூலின் பெயர்தெரியாத ஓர் அறிஞரால் இயற்றப்பட்ட விருத்தியுரையில் மேற்கோளாகவும், இளம்பூரணரின் தொல்காப்பிய உரையில் மேற்கோளாக் காணப்படுவதும் கடவுள் வாழ்த்துப் பாடலென்று கருதப்படுவதுமாகிய எஞ்சிய 1 பாடல் நச்சினார்க்கினியர் உரையில் மேற்கோளாகவும் கிடைத்துள்ளன. இது ஒரு சமண சமய நூல். புகார் நகரில் நவகோடி நாராயணன் என்னும் செல்வச் செழிப்புமிக்க வணிகன் இருந்தான். அவன் சைவ சமயத்தவன். அவனுக்கு இரண்டு மனைவியர். முதல் மனைவி அவன் குலத்தைச் சார்ந்தவள். இரண்டாம் மனைவி வேறு குலத்தைச் சார்ந்தவள். அவன் வேற்றுச் சாதிப் பெண்ணை மணந்ததை எதிர்த்து அவன் குலத்தவர்கள் அவனைச் சாதியைவிட்டு ஒதுக்கி வைப்பதாக அச்சுறுத்தவே அவன் தன் இரண்டாம் மனைவியை விட்டுப் பிரிந்தான். அவன் பிறிந்த சமயத்தில் அப் பெண் கருவுற்றிருந்தாள். பின்னர் அவன் கடற்பயணத்தை மேற்கொண்டு பெரும்பொருள் ஈட்டித் திரும்பித் தன் முதல் மனைவியுடன் இன்பமாக வாழ்ந்து வந்தான். இரண்டாம் மனைவி தன் துன்பம் தீர காளி தேவியை வழிபட்டு வந்தாள். சில மாதம் கழித்து அவள் ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். அவனை நன் முறையில் வளர்த்து வந்தாள். அச்சிறுவனுடைய விளையாட்டு தோழர்கள் அவனைத் தகப்பன் பெயர் தெரியாதவனென்று எள்ளித் துன்புறுத்தவே, அச்சிறுவன் அதுபற்றி தன் தாயிடம் முறையிட்டான். அவள் ஒருவழியாக அவன் தந்தையின் பெயரை அவனுக்குத் தெரிவித்தாள். அது கேட்ட அவன் தன் தந்தையைத் தேடிச் சென்று தன்னை மகனாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினான். ஆயினும் ஊர்க் கட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு நவகோடி நாராயணன் அவனை ஏற்றுக் கொள்ள மறுத்துவிடுகிறான். பின்னர் அவன் தாய் காளியின் உதவியால் செட்டிச்சாதிப் பெரியவர்களிடம் தன் கற்பின் உண்மையை நிலைநாட்டுகிறாள். நாராயணனும் அவனைத் தன் மகனாக ஏற்று அவனுக்கு வீரவாணிபன் எனப் பெயரிட்டு, அவர்களுடன் இனிது வாழ்ந்தான். இவ்வாறு இக் காப்பியத்தின் கதை கூறப்பட்டாலும், இந்நூல் சமண சமயக் கருத்துக்களையும் கூறுவதால், சமண நூலில் காளியைப் பற்றிய செய்திகள் இடம் பெற வாய்ப்புகள் இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. இந்நூலின் செய்யுட்கள் முழுமையாக கிடைக்கப் பெறாததால் இதுபற்றி அறுதியிட்டுக் கூற இயலவில்லை.

**குண்டலகேசி**

குண்டலகேசி ஒரு பௌத்த சமய நூல். குண்டலகேசி விருத்தம் எனவும் இந்நூல் குறிப்பிடப்படுகிறது. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாக இந்நூல் குறிப்பிடப்படுகிறது. சமய வாதங்களைக் கூறுகிற நீலகேசி, பிங்கலகேசி, அஞ்சனகேசி, காலகேசி முதலிய கேசி நூல்களில் ஒன்றாகவும் இந்நூல் கருதப்படுகிறது. குண்டலகேசி பற்றிய செய்திகள் இங்குத் தொகுத்துக் கூறப்படுகின்றன. குண்டலகேசி காவியத்தை இயற்றியவர் நாதகுத்தனார் எனும் பௌத்தர் என்று நீலகேசி உரை (பாடல் 344) குறிப்பிடுகிறது. நாதகுப்தனார் என்பதே மருவி நாதகுத்தனார் என வழங்கிற்று என்பர். சோழ நாட்டில் வாழ்ந்த பௌத்தத் துறவி காசியப தேவர், விமதிவினோதனீ எனும் பாலிமொழி நூலுக்குத் தாம் எழுதிய டீகா என்னும் உரையில் குண்டலகேசி ஆசிரியர் நாகசேனர் என்கிறார். அவர் கூறுவதாவது, “பழங்காலத்தில், இந்தத் தமிழ்நாட்டில் மாறுபட்ட கொள்கை உடைய நாகசேனனன் என்னும் ஒரு தேரர், எதிரிகளின் கொள்கைகளை அழிக்க எண்ணிக் குண்டலகேசி என்ற காப்பியத்தைத் தமிழில் இயற்றினார். இராச கிருக நாட்டு அமைச்சன் மகள் பத்திரை. அவள் தனது மாளிகையில் விளையாடிக் கொண்டிருந்தபோது, அரச சேவகர்கள் கள்வன் ஒருவனைக் கொலைக்களத்திற்கு அழைத்துச் சென்றதைக் கண்டாள். அவனுடைய இளமையும் அழகும் அவள் மனதைக் கவர்ந்தன. அவன்மேல் அவள் காதல் கொண்டாள். இதை அறிந்த தந்தை, கள்வனை விடுவித்துத் தன் மகளை அவனுக்குத் திருமணம் செய்து வைக்கிறான். இருவரின் அன்பு வாழ்க்கை, காதல் வாழ்க்கை இனிதே நடக்கிறது. ஒரு நாள் ஊடல் கொண்ட பத்திரை, ‘நீ கள்வன் மகன் அல்லனோ’ என விளையாட்டாகச் சொல்ல, அது அவன் உள்ளத்தைப் பாதிக்கிறது. அவளைக் கொல்லக் கருதிய அவன், அவளை மலை உச்சிக்கு அழைத்துச் சென்று, அவளைக் கீழே தள்ளிக் கொல்லப் போவதாகக் கூறுகிறான். நிலைமையை உணர்ந்த பத்திரை, அவனுக்கு உடன்பட்டவள் போல் நடித்து, “நான் இறப்பதற்குமுன் உம்மை வலம் வரவேண்டும்’ என்கிறாள். பின் அவனை வலம் வருபவளைப் போல, பின் சென்று அவனைக் கீழே தள்ளிக் கொன்று விடுகிறாள். பிறகு, பத்திரை, வாழ்க்கையை வெறுத்தவளாய், பல இடங்களில் அலைந்து திரிந்து, பின் சமண சமயத்தவர் வாழும் மடத்தை அடைந்து, சமணத் துறவியாகிறாள். அங்குச் சமணக் கொள்கைகளைக் கற்றுத் தேர்ந்து, பின் பிற சமயக் கருத்துகளை எல்லாம் முறைப்படி கற்றுத்

தேர்கிறாள். பின் சமயவாதம் செய்யப் புறப்பட்டு, நாவல் கிளையை நட்டுச் சமய வாதம் செய்து வென்று, பலரைச் சமண சமயம் சாரச் செய்கிறாள். ஒரு நாள், நாவல் நட்டு விட்டு ஊருக்குள் பிச்சை ஏற்கச் செல்கிறாள். அப்போது கௌதம புத்தரின் மாணவர் சாரிபுத்தர், பத்திரை நட்டு வைத்த நாவலைப் பிடுங்கி எறிந்து விடுகிறார். இதனால் இருவருக்கும் இடையே சமய வாதம் நிகழ்கிறது. வாதத்தில் பத்திரை தோற்க, சாரிபுத்தர் ஆணைப்படி பௌத்தத் துறவியாகிறாள். சாரிபுத்தர் குண்டலகேசியைப் (பத்திரை) பகவான் புத்தரிடம் அழைத்துச் செல்ல, அவர் முன்னிலையில் அவள் பௌத்தத் துறவியாகிறாள். இங்குப் பத்திரை சமண சமயம் சார்ந்தபோது அவள் தலைமயிர் மழிக்கப்பட, அது உடனடியாகச் சுருண்டு வளர்கிறது. இதனால் அவள் குண்டலகேசி எனப் பெயர் பெறுகிறாள். இக்கதையில் 'கள்வன் மகன் அல்லனோ' என்றதற்காக அவளைக் கொல்லத் துணிகிறான். ஆனால் தேரீ அவதானம் முதலான வடமொழிக் கதைகளில், குண்டலகேசியின் (பத்திரை) கணவன், அவள் நகைகளைக் கொள்ளையடிப்பதற்காகவே அவளைக் கொல்லப் போவதாகக் குறிப்பிடுகிறான்.

**சீவக சிந்தாமணி**

இக்காப்பியத் தலைவன் பெயர் சீவகன் ஆகும். சிந்தாமணி என்பது தேவலோகத்தில் உள்ள ஒரு மணியாகும். அது கற்பகத்தரு மற்றும் காமதேனு போன்று கேட்டதைத் தரும் இயல்புடையதாகும். அதனால்தான் 'சீவகனுடைய கதையைக் கூறும் சிந்தாமணி போன்ற காப்பியம்' என்ற பொருளில் இதற்குச் சீவக சிந்தாமணி எனப் பெயரிட்டார் இக்காப்பியத்தின் ஆசிரியர் திருத்தக்கதேவர். சீவக சிந்தாமணி மொத்தம் 3145 பாடல்களைக் கொண்டது. பதின்மூன்று இலம்பகங்களையுடையது. இலம்பகம் என்பதற்கு மாலை என்பது பொருளாகும். அத்தியாயம் என்றும் சொல்லலாம். அதாவது உட்பிரிவுக்குத் திருத்தக்கத்தேவர் வைத்த பெயர் இலம்பகம் ஆகும். முத்தி இலம்பகம் தவிர ஏனையவை மகளிர் பெயரையே பெற்றுள்ளன. பெரும்பாலான இலம்பகங்களில் மணநிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. சீவகன் எட்டு பெண்களை மணக்கின்ற நிகழ்ச்சி எட்டு இலம்பகங்களில் கூறப்பட்டுள்ளது. எனவே தான் இக்காப்பியத்திற்கு 'மணநூல்' என்ற பெயரும் உண்டு. பதிகத்தில் காப்பியத்தின் கதைச் சுருக்கம் கூறப்பட்டுள்ளது. இக்காப்பியத்தை இயற்றிய திருத்தக்கதேவர் சமண முனிவராவார். இவர் திருத்தகு முனிவர் என்றும், திருத்தகு மகா முனிவர் என்று அழைக்கப் பெறுவார். இவர் சைன ஆசாரியர் சங்கங்களில் ஒன்றாகிய திரமிள சங்கத்து அருங்கலான்வயத்தைச் சேர்ந்தவர் என்பர். இவர் வாழ்ந்த காலமும் இடமும் தெளிவாகத் தெரியவில்லை என்றாலும், இவர் கி.பி. 2ஆம் நூற்றாண்டிற்கும் 7ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். திருத்தக்கதேவர் சோழர் குடியில் பிறந்தவர். இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்த விளங்கியவர். வடமொழிப் பயிற்சி மிக்கவர். காமம், பொய், கொலை, கள், சூதாடல் என்ற ஐவகைத் தீமையும் அகற்றியவர். சமணத் துறவியாக வாழ்ந்தவர். விருத்தமெனும் பாடல்களைக் கொண்டு பெருங்காப்பியம் பாடியவர்களில் இவர் முதன்மையானவர். ஒரு சமயம் திருத்தக்கதேவர் மதுரை சென்றிருந்தபோது, அங்கிருந்த புலவர்கள், சமண சமயத்தவர் துறவறம் பற்றிப் பாட இயலுமே ஒழிய அகப்பொருட் சுவை மிக்க இன்பத்துறைப் பாடல்களைப் பாட இயலாது என்று இகழ்ந்துரைத்தனர். இதனால் மனவருத்தமுற்றை இவர் தம் ஆசிரியரிடம் இதுபற்றி கூறினார். இவரின் திறமையை உலகுக்கு உணர்த்த விரும்பிய ஆசிரியர், அப்பொழுது குறுக்கே ஓடிய நரி ஒன்றைப் பற்றி ஒரு நூல் இயற்றுமாறு கூறினார். அப்போதே ஆசிரியர் போற்றும் வண்ணம், செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை பற்றிக் கூறும் 'நரி விருத்தம்' என்னும் அற்புதமான ஒரு சிறு நூலை இயற்றினார். திருத்தக்கதேவரின் கற்பனைத் திறனைக் கண்டு வியந்த ஆசிரியர் சீவகன் வரலாற்றை அகப்பொருள் சுவை மிளிர பெருங்காப்பியமாக பாடுமாறு கட்டளையிட்டார். அதோடு 'செம்பொன்வரைமேல்' என்ற ஒரு பாடலை எழுதி அவரிடம் கொடுத்து, அதனையே கடவுள் வாழ்த்தாகக் கொண்டு நூலைத் தொடங்குமாறு கூறினார். ஆசிரியர் பாடிய அப்பாடலோடு திருத்தக்கதேவரும், 'மூவா முதலா' எனத் தொடங்கும் சித்தரைத் துதிக்கும் பாடல் ஒன்றைப் பாடினார். ஆசிரியர் தாம் பாடிய பாடலைவிட தம் மாணவர் பாடிய பாடல் சிறப்பாக இருப்பது கண்டு, திருத்தக்கதேவரின் பாடலை முதலாகவும், தம் பாடலை இரண்டாவதாகவும் வைக்கும்படி கூறினார். அதனால் தான் இக்காப்பியத்தில் சித்தர் வணக்கம் முதலாவதாகவும், அருகர் வணக்கம் இரண்டாவதாகவும் உள்ளது. திருத்தக்க தேவர் இக்காப்பியத்தை எட்டே நாட்களில் பாடி அருளியதாகக் கூறுவர். பாண்டியன் அவையிலே திருத்தக்கதேவர் தமது நூலை அரங்கேற்றினார். காப்பியத்தின் நடை, அழகு, அமைப்பு, ஒன்பது சுவைகள் ஆகியவற்றைக் கண்டு புலவர்கள் பலர் வியந்து பாராட்டினர். ஆனால் சில அழுக்காறு கொண்ட புலவர்கள், இன்ப சுவை கொண்ட

பாடல்களைப் பாட வேண்டுமாயின் இவருக்கு நல்ல முன் அனுபவம் இருந்திருக்க வேண்டும் என்று கூறினார்கள். இது கேட்ட திருத்தக்கதேவர் கையிலே நெருப்பை ஏந்தி தமது அகத் தூய்மையை அனைவரும் அறியச் செய்தார். கம்பர் போன்ற பெரும் புலவர்களுக்குச் சீவக சிந்தாமணி கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தது என்றால் மிகையாகாது.

**முடிவுரை**

காப்பியம் என்பது இலக்கிய வடிவங்களில் ஒன்று. இதனைப் பெருங்காப்பியம் என்றும், சிறுகாப்பியம் என்றும் பகுத்துக் காட்டினர் அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றோடு ஓர் ஒப்பிலாத் தலைவனையும் தலைவியையும் கொண்டு இயற்றப்படுவது பெருங்காப்பியமாகும். வாய்மொழி இலக்கியம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், கதைபொதி பாடல்கள் என்று இது விரிந்து வளர்கிறது. நான்கு பொருள்களையும் பயக்காமல் சில பொருள்கள் மட்டும் பயக்கும் கதைநூல் சிறுகாப்பியம். தமிழின் பழைய இலக்கியங்கள் தனிப்பாடல் திரட்டுக்களாகவே உள்ளன. தமிழ் மொழியில் 3 அடி முதல் 782 அடியுள்ள நீண்ட பாட்டு வரையில் உள்ள தனிப்பாட்டுகளே சங்க இலக்கியமாக உள்ளன. தொடக்கத்தில் நாட்டுப் பாடல்களின் ஓசையமைப்பையும் பொருள் வகையையும் ஒட்டி வளர்க்கப்பட்ட தனிப்பாடல்களே தமிழ் இலக்கியத்தின் தோற்றமாகும். சங்கப் பாடல்களில் நாட்டியக் கலையில் நன்கு தேர்ந்த விறலியர், கூத்தர், பொருநர் என்போர் பற்றிய குறிப்புகள் உள. ஆயினும் சங்க காலத்தில் கதை தழுவிய நாடகங்களும் கதைகளும் பல இருந்திருக்கக் கூடும். ஆனால், அந்தக் கதைகள் திரண்டு வளர்ந்து காப்பியங்களாக உருவம் கொள்ளவில்லை. கற்றறிந்த புலவோர் அந்தக் கதைகளை எழுதிப் போற்ற மனம்கொள்ளாதது காரணமாக இருக்கலாம்

**ஆதாரங்கள்**


1. தமிழ் இலக்கிய வரலாறு - மு. வரதராசன் முதல் பதிப்பு (1972).
2. ம. பொ.சிவஞானம் பிள்ளை., சிலப்பதிகாரமும் தமிழரும் [1947].
3. ம. பொ.சிவஞானம் பிள்ளை.,கண்ணகி வழிபாடு [1950].
4. ம. பொ.சிவஞானம் பிள்ளை., இளங்கோவின் சிலம்பு [1953].
5. ஸ்ரீ சந்திரன். ஜெ, தமிழ் இலக்கிய வரலாறு, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, பதினொன்றாம் பதிப்பு, 2004.
6. Tiruttakkatevar (2012), Civakacintamani: The Hero Civakan, the Gem That Fulfills All Wishes: Verses 1166-1888, Jain Publishing Company, ISBN 978-0-89581-847-8
7. நாதகுத்தனார் இயற்றிய குண்டலகேசி - பொ.வே. சோமசுந்தரனார் விளக்கவுரையுடன்] http://www.tamilvu.org/ta/library-l3500-html-l3500por-133357 பெருமழைப் புலவர் திரு பொ வே சோமசுந்தரனார் விளக்கவுரையுடன் - குண்டலகேசி


*****